# வைணவ இலக்கியமும், வரலாறும்

- மனு முதலான மஹான்கள் செய்த நூல்களை ஸ்ம்ருதிகள் என்பர்.
- வால்மீகி, வியாஸர் - இவர்கள் செய்த இராமாயண, மஹாபாரதங்களை இதிகாசங்கள் என்பர்.
- பராசரர் செய்த ஸ்ரீவிஷ்ணு புராணத்தையும் வியாஸர் செய்த ஸ்ரீ பாகவதம் முதலியவற்றை புராணங்கள் என்றும் கூறுவர்.

## வேதம்

- வேதம், கர்மகாண்டம், ப்ரஹ்ம காண்டம் என இரு பிரிவுகளைப் பெற்றுள்ளது.
- ப்ரமபுருஷன் முகமலர்த்திக்கு உறுப்பாகச் செய்யும் வேள்வி, தானம், தவம் முதலிய கருமங்களையும், அக்கருமங்களைச் செய்யும் விதத்தையும் கூறும் பகுதிக்கு கர்மகாண்டம் என்று பெயர்.
- ப்ரமபுருஷன், அவன் குணங்கள், அவன் திருமேனி, அத்திருமேனியின் குணங்கள், அவன் விபூதிகள் (அவனால் நியமிக்கப்படும் பொருள்கள்) ஆகியவற்றையும், அப்பரமபுருஷனை அடைய உபாயங்களையும், பிரயோஜனத்தையும் கூறும் வேதப் பகுதிக்குப் ப்ரஹ்ம காண்டம் என்று பெயர்.
- கர்ம காண்டத்திற்கு வழி நூல்கள், மனுஸ்ம்ருதி முதலியன தரும சாஸ்திரங்கள்.

- ப்ரஹ்ம காண்டத்திற்கு வழி நூல்கள், இராமாயண மஹாபாரதங்களும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலிய புராணங்களுமாம்.
- சங்க இலக்கிய நூலான பரிபாடலில் திருமாலைப் பற்றிய பாடல்கள் ஆறு உள்ளன.
- நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய அஷ்டப்பிரபந்தம் முதலிய நூல்கள் வைணவ சமயத்தின் முக்கிய நூல்களாகும்.
- கி.பி.6-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தில் வாழ்ந்த ஆழ்வார்கள் 12 பேரினால் இயற்றப்பட்ட பாடல்களை 10-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகள் என்பார் தொகுத்தளித்தார்.
- திவ்ய - மேலான, பிரபந்தம் - பலவகைப் பாடல்களின் தொகுப்பு.
- இந்நூல் முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய் மொழி, இயற்பா என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

## ஆறாயிரப்படி

- நம்மாழ்வாரின் திருமொழிக்கு எழுதப்பட்ட முதல் உரைநடை நூலாகும்
- ஒருபடி என்பது 32 எழுத்துகளைக் குறிக்கும். 6000 படிகள் உள்ளதால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

-----*****-----*****-----